சிவகங்கை, வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர் : திரு.கி.வெங்கடேஸ்வரன், பி.எஸ்சி(விவ)

ஆணை எண்: அநி1/ 8224/ 2019. நாள்: 19.04.2021.

பொருள் : பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப் பணி - கருணை அடிப்படை பணிநியமனம் செல்வி.ஜெ.நீது ஆனிஸ்டெல்லா, இளநிலை உதவியாளர் (பிணையமற்றது), இவ்வலுவலகம் - பணிவரன்முறை செய்து அரசாணை வரப்பெற்றது - தனியரது பணியினை வரன்முறை செய்து ஆணையிடல்- தொடர்பாக.

பார்வை :
1. சென்னை வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்: அநி.1.6/ 121728 / 2018, நாள்: 10.07.2019.
2. சிவகங்கை வேளாண்மை இணை இயக்குநர் செயல்முறை ஆணை எண்: அநி.1/ 8224 / 2019, நாள்: 01.08.2019.
3. சிவகங்கை, வேளாண்மை இணை இயக்குநர் கடிதம் எண்: அநி.1/ 8224 / 2019, நாள்: 30.11.2019, 04.06.2020 மற்றும் 09.02.2021.
4. அரசாணை (3டி) எண்: 37, வேளாண்மை (வே.நி.9) துறை, நாள்: 22.02.2021.

*****

ஆணைகள்:

பார்வை (1), (2)-ல் கண்டுள்ள செயல்முறை ஆணைகளின்படி, இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை அவர்களின் கட்டுப்பாட்டில் தேனி தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகத்தில் வேளாண்மை உதவி அலுவலர்-ஆக பணிபுரிந்து வந்தபோது, 15.10.2010 அன்று பணிக்காலத்தில் இயற்கை எய்திய அமரர்.இரா.ஜெயபால் வாரிசு/மகள் செல்வி.ஜெ.நீது ஆனிஸ்டெல்லா அவர்களுக்கு கருணை அடிப்படையில் இவ்வலுவலகத்தில் அநி-4 பிரிவு காலிப்பணியிடத்தில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது)-ஆக பணியிட நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

2. தனியர் மேற்காணும் விவரப்படி பணிநியமனம் செய்யப்பட்ட பணியிடத்தில் 09.08.2019 முற்பகல் முதல் அரசுப் பணியேற்று பணிபுரிந்து வருகிறார்.

3. மேலும், தனியர் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர் ஆதலால் தனியரது பணியினை அன்னார் அரசுப் பணியேற்ற நாளான 09.08.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து உரிய ஆணையினை அரசிடமிருந்து பெற்றுத்தர கோரி, பார்வை (3)-ல் கண்டுள்ள இவ்வலுவலகக் கடிதங்களின்படி, சென்னை வேளாண்மை இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு, பார்வை (4)-ல் கண்டுள்ள அரசாணையின்படி தனியர் வகித்துவரும்

--2--

பணிக்கு தேவையான உடற்தகுதியினை பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் தனியாரது பணியினை 09.08.2019 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளதை தொடர்ந்து, அவ்வாறே தனியர் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவியில் அரசுப் பணியேற்ற நாளான 09.08.2019 முற்பகல் முதல் தனியரது பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

5. மேலும், தனியர் தனது மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தினை திருப்திகரமாக நிறைவு செய்திட வேண்டும் (Completion of Two Years Service within a continuous period of Three Years) என்ற நிபந்தனையுடன் இவ்வாணை வழங்கப்படுகிறது.

6. தனியருக்கு இளநிலை உதவியாளர் (பி.அ) பதவியில் 09.08.2019 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்கபட்டுள்ளதால், தனது முதல் ஆண்டு ஊதிய உயர்வினை பெறத் தகுதியுடையவராகிறார். மேலும், இவருக்கு இளநிலை உதவியாளர் (பி.அ) பதவியில் தகுதிகாண் பருவம் நிறைவு செய்து ஆணையிடப்பட்ட பிறகே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் ஒப்பளிப்பு செய்து வழங்கப்படும்.

ஒம்./-கி.வெங்கடேஸ்வரன்,
வேளாண்மை இணை இயக்குநர்,
சிவகங்கை.

பெறுநர் :
செல்வி.ஜெ.நீது ஆனிஸ்டெல்லா,
இளநிலை உதவியாளர்(பிணையமற்றது),
இவ்வலுவலகம்.

நகல் : சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது. (அநிபி-1 பிரிவு)

நகல் : கண்காணிப்பாளர் (பணிக்குழு-1) / (பணிக்குழு-2) / (கணக்கு) / (தணிக்கை), இவ்வலுவலகம்.
நகல்: க-1 பிரிவு இவ்வலுவலகம்.
நகல்: பணிப்பதிவேட்டிற்கு.
நகல் : இருப்புக்கோப்பு.
உபரி : 1

//ஆணைப்படி//

ஆட்சி அலுவலர் 20/4/21

20/04/2021

\\Dell-pc\e\2021-Bri\April-2021\Est\Ani 1.docx